Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 163

திங்கட்கிழமை 08 மே 2023

சித்திரை 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மண் துறந்த புத்தனுக்கு எங்கள் மண் மீது ஆசையா?

## கந்தரோடையில் நேற்று கவனவீர்ப்பு




யாழ்ப்பாணம், மே 8
கந்தரோடையின் வரலாற்றைச் சிங்கள- பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் திட்டமிட்ட விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இன வழிப்புச் செயற்பாட்டுக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை »11

வடக்கு – கிழக்கில்

# மதப்பிரச்சினைகள் திடீரென அதிகரிப்பு

## பின்னணி குறித்து மர்மம் என்கிறார் சஜித்



**யாழ்ப்பாணம், மே 8**
**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக திடீரென மதப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இதன் பின்னணி மர்மமாகவே உள்ளது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்தார்.** »11

# வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் இந்து ஆலயங்களும் சட்டவிரோதமே

## கொந்தளிக்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மே 8
வடக்கில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்படையின் முன்னாள் தளபதியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். »11

காணிகளை விற்பதன் மூலம்

# சொந்தப் பணத்தில் சூனியம் வைக்காதீர்!

## சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 8
பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று இனத்தவருக்கு விற்க வேண்டாமென, நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார். »11

# இருபாலையில் வீடு புகுந்து 6 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், மே 8
இருபாலையில் வீடு புகுந்த திருடர்கள் ஆறு பவுண் நகைகளைத் திருடியுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை »11



# மழைநேரத்தில் மின்சாரம் தாக்கி மாணவன் பலி!

யாழ்., மே 8
மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவன் ஒருவன் நேற்று அதிகாலை »11

# ரணிலுடனான நாளைய சந்திப்பு புளொட், ரெலோ பங்கேற்பில்லை

யாழ்ப்பாணம், மே 8
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள சந்திப்புக்கோ அல்லது அதற்கு முன்னதாக சம்பந்தனின் கொழும்பில் இல்லத்தில் இன்று »11

# ஆண்டிறுதியில் சம்பள அதிகரிப்பு

கொழும்பு, மே 8
இந்த ஆண்டின் இறுதியில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம்திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். »11

வடக்கில்

# எரிவாயுத் தட்டுப்பாடு இந்த வாரம் நீங்கும்

யாழ்ப்பாணம், மே 8
இந்த வாரத்துடன் வடக்கில் லிட்ரோ எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு நீங்கும் என்று அந்த நிறுவனத்தின் வடமாகாண விற்பனை முகாமையாளர் ஆர்.ராஜ்குமார் தெரிவித்தார். »11

# சீனி விலை தாறுமாறாக அதிகரிப்பு: நுகர்வோர் அதிகாரசபை அவதானம்

கொழும்பு, மே 8
சீனி விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபை விசேட கவனம் செலுத்தியுள்ளது. »11

சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை

# பணத்துக்காக சிறுவர்களை தப்பிக்க வைக்கும் காவலாளி

## நடவடிக்கை எடுக்காத பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 8
அச்சுவேலியிலுள்ள சிறுவர் நன்னடத்தை பாடசாலையிலுள்ள சிறுவர்களை பணத்தைப் பெற்று அங்குள்ள காவலாளி தப்பிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் உரிய »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடகங்களை அடக்கியாளும்!

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 8

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நடைமுறைக்கு வந்தால், அது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். அது மக்களின் நடமாடும் சுதந்திரத்தைப் பறிக்கும். அத்துடன் ஊடகங்களை அடக்கியாளும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.**

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, உழைக்கும் மகளிர் அமைப்பின் மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் காட்டிலும் மோசமான சட்டவரைவாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் காணப்படுகிறது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் சுதந்திரமாக நடமாடும் சுதந்திரத்தை பறிப்பதாக அமைவதோடு, ஊடகங்களை அடக்குவதாக அமைகிறது. இந்தச் சட்டவரைவு நடைமுறைப்படுத்தப்பட்டால், ஒருவர் பொதுவெளியில் பேசிய விடயங்களை அரசுக்கு எதிரானது எனக்கூறி அவரைக் கைதுசெய்ய முடியும். அவ்வாறு ஒருவர் பேசியதை கேட்டுக்கொண்டிருந்தவரை அரசுக்கு எதிராகத் தூண்டப்படுகிறார் எனக்கூறி அவரையும் கைதுசெய்யமுடியும்.

ஒருவர் தெரிவித்த கருத்துக்களை ஊடகங்களில் வெளியிட்டால் அது அரசுக்கு எதிரான செயற்பாடு என்றவாறாகப் பார்க்கமுடியும். ஏனெனில் பயங்கரவாதம் என்பதற்குச் சரியான விளக்கங்களோ அல்லது வரையறைகளோ இது வரை குறிப்பிடப்படவில்லை. அரகலய போராட்டத்துக்குப் பின்னர் இனியொரு வலுவான போராட்டம் இடம்பெறுவதை தடுக்கும் முகமாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவரை 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க முடிவதோடு பிணை வழங்குவதால் சட்டமா அதிபரிடம் அனுமதி பெறப்படவேண்டும்.

ஆனால், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்படுவதோடு நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 18 மாதங்களாகத் தடுத்து வைக்கப்படுவதை மூன்று மாதங்களாக புதிய சட்டவரைவில் குறைத்திருந்தாலும், சுமார் 20 வருடங்கள் வரை சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமலே இழுத்தடிக்க முடியும்.

மேலும் நீதிமன்றத்துக்குரிய அதிகாரங்கள் சில ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு உட்பட்டதாக புதிய சட்டவரைவில் வெளிவரவுள்ளது. அதாவது நாட்டுக்குள் செயற்படும் தனிநபர்களை அல்லது குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் நிதிகளை முடக்குவதற்கும் உத்தரவிடும் அதிகாரம் நீதிமன்றங்களில் இருந்து நிறைவேற்று ஜனாதிபதியின் கைகளுக்குச் செல்கிறது.

ஆபத்துக்கள் நிறைந்த பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைத் தோற்கடித்த தென்னிலங்கை தயாராகி வருகின்றது. இதற்கு சிறுபான்மை மக்களும் தமது ஆதரவை வழங்க வேண்டும் - என்றார். (ம-20)

## கொரோனா: மூவர் சாவு

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை மூவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை 13 பேருக்கும் நேற்றுமுன்தினம் 8 பேருக்கும் புதிதாக கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று இன்னமும் முழுமையாக நீங்கவில்லை. சுகாதார நடைமுறைகளை மக்கள் அவசியம் பின்பற்ற வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஐஸ் போதையுடன் இருவர் கைதாகினர்

## மதவாச்சியில் சம்பவம்

மன்னார், மே 8

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி விகும்புர பிரதேசத்தில் 12 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவரை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் - தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து காரொன்றை மறித்து சோதனையிட்டபோது காரினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஐஸ்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 12 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் 38 வயதுடையவர், மற்றையவர் 27 வயதுடையவர்.

கல்பிட்டியை சேர்ந்த 38 வயதுடைய மற்றும் மன்னார் - அடம்பனைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் சான்றுப்பொருள்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-213)

# மழை காரணமாக சிறுவருக்கு நோய்

கொழும்பு, மே 8

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் சிறுவர்களுக்கு வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் அதிகரித்து வருகின்றன என்று சிறுவர் நல விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- மழையுடன் ஈக்கள் போன்றவற்றின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளமையால் சிறுவர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. சிறு குழந்தைகளை இவ்வாறான நோய்களில் இருந்து பாதுகாக்க சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் - என்றார்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் தொற்றுநோய்களின் பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ம)

# எல்லை நிர்ணயத்துக்கு 400 முன்மொழிவுகள்!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, மே 8

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து கிட்டத்தட்ட 400 முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறித்த பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து வருவதாகவும், விரைவில் அவை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பகிர்ந்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார். கடந்த மாதம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு காலவகாசமும் வழங்கப்பட்டது. குறித்த முன்மொழிவுகளை தேசிய எல்லை நிர்ணயக்குழு பரிசீலித்து குழுவின் இறுதி அறிக்கை இந்த மாதத்தின் மூன்றாம் வாரத்தில் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கட்டுப்பாட்டை இழந்து கப்ரக வாகனம் விபத்து

## சாரதிக்குக் காயம்

மன்னார் - தள்ளாடிக்கும் பெரிய பாலத்துக்குமிடையே கப்ரக வாகனமொன்று வீதியோரக் கற்களில் மோதி புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 2 மணியளவில் நிகழ்ந்துள்ளது.

மன்னார், சிலாவத்துறை - வேப்பங்குளம் பகுதியிலிருந்து இறால் ஏற்றிவந்த கப்ரக வாகனமே விபத்துக்குள்ளாகியுள்ளது என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். வாகனத்தின் சாரதி காயமடைந்த நிலையில் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-213)

# மன்னார் மாவட்டப் பிரச்சினைகள் தீர்வைப் பெறுவதற்கு ஆராய்வு!

மன்னார், மே 8

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஒன்றுகூடல், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

சமூகமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உட்படப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது எந்தவித கட்சி முரண்பாடுகளையோ அல்லது விருப்பு வெறுப்புக்களையோ பிரயோகிக்காது மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ரூபாவில் வர்த்தகம்: டில்லியில் பேச்சு ஆரம்பம்!

**கொழும்பு, மே 8**
**இந்தியாவும் இலங்கையும் மின்சக்தி, எரிசக்தித் துறை தொடர்பான அம்சங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தவுள்ள பின்னணியில், இந்த வர்த்தகங்களை இந்திய ரூபாவில் மேற்கொள்வதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நிர்வாகத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரியான பிரமோத் குமார் மிஸ்ரா, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவைப் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்து இதுதொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.
அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் ஊடாக இலங்கையில் இந்திய முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது. (ம)

## ஆடைகளற்ற நிலையில் சிறுமியின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 8
களுத்துறை - காலி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்குப் பின்பாகவுள்ள ரயில் தண்டவாளத்துக்கு அருகே சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஆடைகளற்ற நிலையில் நிர்வாணமாக அந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
களுத்துறை - நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மீட்கப்பட்டமை தொடர்பில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## உயர்வடைகிறது கோதுமைமா விலை

கொழும்பு, மே 8
கோதுமை மாவுக்காக வழங்கப்பட்டு வந்த இறக்குமதி வரி விலக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மீளப்பெறப்பட்டுள்ளது. அதனால் அதன் விலை உயர்த்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.
2020ஆம் ஆண்டு ஜனவரியில் கோதுமை மாவுக்கான இறக்குமதி வரி 3 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. இந்த வரியை மீண்டும் பழைய மட்டத்திலேயே நடைமுறைப்படுத்துமாறு நிதியமைச்சு சுங்கத் திணைக்களத்தை அறிவுறுத்தியுள்ளது.
அதற்கமைய இறக்குமதி வரி, பெறுமதி சேர் வரி உள்ளிட்ட வரிகளால் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்படலாம் என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.
எனினும் துருக்கியிலிருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதால் பெரிய தொகையில் மாவின் விலை உயர்த்தப்படாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## டுபாய் பறந்தார் பஸில்

கொழும்பு, மே 8
முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தருமான பஸில் ராஜபக்ச கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து டுபாய்க்குச் சென்றுள்ளார்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அவர் புறப்பட்டுச் சென்றுள்ளார் என விமான நிலைய செய்திகள் தெரிவிக்கின்றன.
இந்தப் பயணத்தில் பஸில் ராஜபக்சவுடன் அவரது மனைவியும் சென்றுள்ளார். எமிரேட்ஸுக்குச் சொந்தமான விமானத்தில் இருவரும் டுபாய்க்குப் புறப்பட்டுள்ளனர். (ச-இ)

## இலங்கை அரசாங்கத்துடன் பலமான இராணுவ உறவு!

### ஆஸி. திட்டம்

கொழும்பு, மே 8
அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புப் படை இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள பிற நாடுகளுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை உருவாக்கத் தயாராகி வருவதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அவுஸ்திரேலியாவின் அரசாங்கம் பிராந்தியப் பாதுகாப்பைக் கருதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இந்தத் திட்டத்தில் இலங்கை, மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை- அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனான உறவுகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போதே வலுவாகக் கொண்டுள்ள நிலையில், அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
அவுஸ்திரேலியாவின் இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின்படி, கூட்டு இராணுவப் பயிற்சிகளை நடத்துதல், பங்காளி நாடுகளின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், மூலோபாய உரையாடல்களை நடத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு ஆதரவை வழங்குதல் ஆகியவை அடங்கும். (ம)




**வெ**டுக்குநாறிமலைக்கு முந்தநாள் சரத் வீரசேகர போனவரெல்லோ. அவர் போகேக்க அங்க சிவன் கோயில்ல பொங்கல் , பூசை நடந்து கொண்டிருந்தது. ஆனால் அதையெல்லாம் சரத் வீரசேகர திரும்பியும் பாக்கேலை. அவருக்கும் வெடுக்குநாறிமலைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. தொல்லியல் திணைக்களத்தின்ர கண்காணிப்பில இருக்கிற இந்த மலையில உள்ள சிவனைக் கும்பிடப்போறதுக்கு இஞ்ச உள்ள அமைச்சர்மாருக்கே சிக்கலா இருக்கேக்க, தன்னோட ஒரு படை பட்டாளத்தோட ஒரு சிங்கள எம்.பி. பொலிஸ் பாதுகாப்போட போய்வர முடியுதெண்டால், இந்த ஆட்சியின்ர சீத்துவக் கேட்டை விளக்க வேற உதாரணமொண்டும் தேவையில்லை.

இப்ப சொல்ல வந்தது அதையில்லை. வெடுக்குநாறிமலைக்குப் போன சரத் வீரசேகர, மலை உச்சியில் ஒரு கிடங்கு வெட்டப்பட்டு இருந்ததைக் கண்டிட்டு, 'இப்பிடி தொல்லியல் இடத்தை நாசம் செய்தவங்களை சும்மாவிட மாட்டன். நீதிமன்றத்தில வழக்குப் போட்டு சட்ட நடவடிக்கை எடுப்பன்' எண்டு சபதம் போட்டிட்டு போயிருக்கிறார். அவலை நினைச்சுக் கொண்டு உரலை இடிச்ச மாதிரி, கிடங்கு வெட்டினது கோயில்காரர் எண்ட நினைப்பிலதான் வீரசேகர அப்பிடிச் சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில அந்தக் கிடங்குக்கும் கோயில்காரருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எண்டது சனத்துக்கு மட்டுமில்லை, பொலிஸ்காரருக்கும் வடிவாத் தெரியும்.

வெடுக்குநாறிமலையில அமைச்சர் டக்ளஸும், அமைச்சர் ஜீவனும் சிலையளை வைக்கவெண்டு வெளிக்கிட முதல்நாளே, தன்ர விசுவாசத்தை அமைச்சர் டக்ளஸுக்கு காட்டவேணும் எண்டு வவுனியா எம்.பி. திலீபன் துடிச்சிருக்கிறார். அப்பிடி ஓவர் விசுவாசத்தைக் காட்டுறதுக்காக முதல்நாளே ரண்டு கூலியாக்களைக் கூட்டிக்கொண்டுபோய், மலையுச்சியில சிவலிங்கம் வைக்கிறதுக்கான பீடம் கட்ட கிடங்கு வெட்டியிருக்கிறார். அதைப் பொலிஸ் கண்டிட்டுத்தான் 'தொல்லியல் இடத்துக்கு சேதம் விளைவிக்கினம்' எண்டு , அங்க ஒருத்தரையும் போகவிடாமல் பண்ணினது. டக்ளஸும், ஜீவனும் அண்டைக்கு மலையுச்சிக்குப் போகாததுக்கு காரணமே, வவுனியா எம்.பி.செய்த மூக்குப் புடைச்ச வேலைதான். இப்ப அவர் வெட்டின கிடங்குக்குத்தான் வீரசேகர வழக்குப் போடப்போறாராம். அப்பிடி வழக்குப் போட்டால் மாட்டப்போறது அதே வீரசேகர இருக்கிற அரசாங்கத்துக்கு முட்டுக்குடுக்கிற எம்.பி. தான்.



- பட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத வைத்தியசாலை கலாசார சீரழிவின் இடமா?

## பொதுஅமைப்புக்கள் விசனம்

**கிளிநொச்சி, மே 8**

**தருமபுரம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலை பற்றைகள் சூழ்ந்து கால்நடைகள் தங்குமிடமாக மாறியுள்ளது. அத்துடன் கலாசாரச் சீரழிவுகளும் அங்கு இடம்பெறுகின்றன. எனவே அந்த வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு உரியதாக மாற்றி விரைவில் கையளிக்க வேண்டும் என பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**



பல இலட்சம் ரூபா செலவில் தருமபுரம் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நவீன ஆயுள்வேத வைத்திய சாலை அமைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து ஒருவருடம் கடந்த போதிலும் மக்கள் பாவனைக்காக அந்த வைத்தியசாலை இதுவரை திறக்கப்படவில்லை.

அதனால் வைத்தியசாலை வளாகம் பற்றைகளால் சூழப்பட்டுள்ளதுடன் இரவுவேளைகளில் கால்நடைகளின் தங்குமிடமாகவும் காணப்படுகிறது. மதுப்பிரியர்களின் வாழ்விடமாகவும் மாறியுள்ளது. பல இலட்சம் ரூபா செலவில் பணத்தைச் செலவழித்து புதிதாக அமைக்கப்பட்ட இந்த வைத்திய சாலையை விரைவாக மக்கள் பாவனைக்கு விடவேண்டும்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது அமைப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-113)



# கடும் மழையால் முறிந்தது மரம்!

## போக்குவரத்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 8

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரிக்கு முன்பாக இருந்த பெரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

வீழ்ந்த மரத்தை வெட்டி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சிலமணிநேரம் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்தது.

இந்த இடர் காரணமாக தொழில்நுட்பக் கல்லூரிக்கு பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீர்க் குழாய்களை பொருத்துவதற்கான திட்டத்தின்போது குறித்த மரத்தின் ஒருபக்க வேர்களை வெட்டியமையால் இந்த மரம் வீழ்ந்துள்ளது என மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். அத்துடன் குறித்த மரத்துக்கு அருகிலுள்ள ஏனைய மரங்களின் வேர்ப்பகுதிகளும் வெட்டப்படுகின்றன. அதனால் அந்த மரங்களும் எதிர்காலத்தில் விழக்கூடிய சாத்தியக்கூறு ஏற்பட்டுள்ளது என மக்கள் சுட்டிக்காட்டினார்கள். (ச-26)

# இடியுடனான மழை வடக்கில் தொடரும்

கொழும்பு, மே 8

வடமாகாணத்தில் இடியுடனான மழை தொடரும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு- கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேற்கு மற்றும் தெற்கு கரையோரப் பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)



# வவு. வெடுக்குநாறிமலை ஆதிசிவனுக்கு பொங்கல்

வவுனியா, மே 8

வவுனியா - வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் அகில இலங்கை சைவ மகாசபை மற்றும் தமிழ்ச் சைவப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொங்கல் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-66)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சல் ஏற்படலாம். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக் கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புஉண்டு. ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சங்கடங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் தொடர்பு கொண்டு பேசுவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிரிட்டனும் ஈழத்தமிழரும்!

உலகின் பல நாடுகளிலுள்ள குற்றவாளிகளுக்கும், போர்க்குற்றவாளிகளுக்கும் எதிராகப் பல்வேறு தடைகளை அறிவிக்கும் பிரிட்டன், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஏன் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளது பிரித்தானியத் தமிழர் பேரவை. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கத்தேய நாடுகளால், அதிலும் குறிப்பாகப் பிரிட்டனால் நேர்த்தியான செயலெதுவும் ஆற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை கடந்த பல வருடங்களாகவே தமிழர்களும் தன்னார்வ அமைப்புக்களும் முன்வைத்துவரும் பின்னணியில், இந்த அதிருப்தி மனோநிலையை காலக்கண்ணாடியாகப் பதிவுசெய்திருக்கின்றது பிரித்தானியத் தமிழர் பேரவை.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் ஆட்சியமைத்திருந்த காலத்தில், அவரின் அரசாங்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையில் 'அறிவிக்கப்படாத' பனிப்போரொன்று இடம்பெற்றுவந்தது. இதனால், அமெரிக்காவின் அதீத தலையீட்டுடன் கையாளப்பட்ட பல்வேறு விடயங்கள் பிரிட்டனினதும் பிரான்ஸினதும் கண்காணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பரஸ்பர புரிதல் மனோநிலையில் கொண்டுவரப்பட்டன. அந்தவகையில், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய தீர்மானங்களுக்கு இணை அனுசரணையை பிரிட்டன் வழங்கியது. எனினும், இணை அனுசரணையை வழங்கிய நாடு என்ற வகையிலும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இனப்படுகொலைக் குற்றச்சாட்டை நேரடியாகச் சுமத்திய நாடு என்ற ரீதியிலும் குறைந்தபட்ச நியாயப்பாடுகளுடன் பிரிட்டன் இதுவரையில் நடந்துகொள்ளவில்லை.

'இலங்கையில் இனப்படுகொலைகள் முன்னெடுக்கப்பட்டன' என்ற தீர்மானத்தை கனேடிய நாடாளுமன்றம் நிறைவேற்றியிருந்தது. இந்தத் தீர்மானத்தைத் தற்துணிவாக நிறைவேற்றிய ஒரு நாடாக கனடா தன்னைப் பதிவு செய்திருந்தது. இவ்வாறான தீர்மானங்களை வெளிப்படையாக எடுக்காவிட்டாலும், இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலைகளுக்கு எதிராக அமெரிக்கா காலத்துக்குக்காலம் பல்வேறுபட்ட அழுத்தங்களை – வலியுறுத்தல்களை – எதிர்ப்புக்களை தூதரக ரீதியாகவும் இதர வழிமுறைகளிலும் மேற்கொண்டே வந்திருக்கின்றது. இப்போதும்கூட வசந்த கரன்னகொடவுக்கு தனது நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்திருக்கின்றது அமெரிக்கா. ஆனால், பிரிட்டனால் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக எதைத்தான் செயற்படுத்தமுடிந்தது?


இத்தனைக்கும், இனப்படுகொலையாளர்களையோ அல்லது மனித உரிமைகள் மீறல்களையோ சகித்துக்கொள்ளும் ஒருநாடு அல்ல பிரிட்டன். பிரித்தானியத் தமிழர் பேரவை சொல்வதைப்போன்று, மனித உரிமைகள் மீறல்களுக்காக உலகின் பல அமைப்புக்களுக்கும் தனிநபர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தடைகளை இதற்கு முன்னரும், சமீப நாள்களாகவும் பிரிட்டன் விதித்திருக்கின்றது. அப்படியெனில், இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதையும், இனரீதியான அடக்குமுறை தொடர்வதையும் பிரிட்டன் மறைமுகமாக ஊக்குவிக்கின்றதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னரும் வலிந்து ஏற்படுத்தப்பட்ட புலம்பெயர்வுகளின்போது, பல்லாயிரம் ஈழத்தமிழர்களுக்குப் பிரிட்டனே அடைக்கலம் கொடுத்தது. இதனால், தேவைக்கும் மேற்பட்ட ஆதாரங்களை ஆவணப்படுத்தவும் – திரட்டவும் – வெளிப்படுத்தவும் பிரிட்டனால் முடியும். அவ்வாறான பல்லாயிரம் ஆதாரங்கள் பிரிட்டனின் கைகளில் ஏற்கனவே இருக்கவும் செய்கின்றன. இவ்வாறானதொரு நிலையில் கனடா, அமெரிக்கா போன்று பிரிட்டனும் நடந்துகொள்ளவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு.

நாளொரு நல்வார்த்தை

மாற்றத்துக்கு ஏற்ப
தகவமைத்துக் கொள்ளும்
திறனே புத்திக்கூர்மை

– ஸ்ரீபன் ஹக்கிங்



# திருடர்களின் ஒன்றிணைவே ரணில், பெரமுன அரசாங்கம்

## ஐ.ம.ச. சாட்டையடி

**கொழும்பு, மே 8**

**ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக்கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும்வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்கமுடியாது. திருடர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இருக்கும்போது எப்படித் திருடர்களைப் பிடிப்பது?**

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'ஊழல் தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக அரசு தெரிவிக்கின்றது. அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து என்ன பயன்? இறுதியில் நீதிமன்றத்தையே அவமதித்துவிட்டுச் செல்வார்கள். ரணில் விக்கிரமசிங்கவும், மொட்டுக்கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும்வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்கமுடியாது. திருடர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இருக்கும்போது எப்படித் திருடர்களைப் பிடிப்பது?

மக்களைச் சிக்கலில் தள்ளாமல் அவர்களை நல்ல முறையில் வாழ வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ம-22)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டால் முழுஆதரவு

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 8

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக இறங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்குவேன் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

'அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் தகுதியான ஒரு வேட்பாளரை நிறுத்தி அதில் நிச்சயம் வெற்றி பெறுவோம். அந்த் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் இருக்க முடியும். அவர் வேட்பாளராக வந்தால் அவருக்கு நான் முழு ஆதரவு வழங்குவேன்.

வீழ்ந்து கிடந்த பொருளாதாரத்தை அவர் இப்போது மெல்ல மெல்லத் தூக்கி நிமிர்த்தி வருகின்றார். அவர் மிகவும் திறமைசாலி என்பதை நிரூபித்துள்ளார். அவர் ஜனாதிபதியாக வந்தவுடன் எரிபொருள்களுக்கான வரிசை இல்லை. மின்வெட்டு இல்லை. உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு இல்லை. டொலர் பிரச்சினை தீர்ந்துகொண்டு வருகின்றது.


டொலரின் பெறுமதி குறைந்து நாணயத்தின் பெறுமதி அதிகரித்துக்கொண்டு வருகின்றது. எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. இப்படியான ஒரு திறமைசாலி தொடர்ச்சியாக நாட்டை ஆட்சி செய்தால் நாடு நிச்சயம் முன்னேறும். அவர் வேட்பாளராகக் களமிறங்கினால் நான் அவரை ஆதரிப்பேன்- என்றார். (ம-22)

நாளை


09.05.2023
செவ்வாய்க்கிழமை
சித்திரை 26

சுபநேரம் : 1024 - 11.54
ராகுகாலம் : 02.54 - 04.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். வல்வை முத்துமாரியம்மனின் வருடாந்த மஹோற்சவத்தின் 10ஆம் திருவிழா தண்டிகை கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாக இடம்பெற்றது. (ய-27)



வரலாற்றுச் சிறப்புமிக்க பருத்தித்துறை கொன்றைமர நிழல் நாயகி கோட்டுவாசல் ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் 7ஆம் திருவிழாவான திருமுழுக்கு திருவிழா கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-27)



உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் குருதிக்கொடை முகாம் யாழ். பல்கலையின் ஊழியர் சங்கத்தினரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-125)



# சத்துணவுத்திட்டம்

உலக வங்கியின் நிதி அனுசரணையில் உள்ளூராட்சி மன்றங்களின் வலுப்படுத்தல் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் சத்துணவு வழங்கும் திட்டம் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. நகரசபை எல்லைக்குள் இயங்கிவரும் ஒன்பது முன்பள்ளிகளில் பிரதேசசெயலகத்தினால் ஏற்கனவே சத்துணவு வழங்கப்படும் ஐந்து முன்பள்ளிகளைத் தவிர்த்து மற்றைய முன்பள்ளிகளான பொலிகை விநாயகர் முன்பள்ளி, வல்வை விக்கினேஸ்வரா முன்பள்ளி, திருமகள் முன்பள்ளி மற்றும் கலைவாணி முன்பள்ளி என்பன இந்தத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் மர நடுகை மற்றும் பெற்றோருக்கான ஊக்கப்படுத்தல் நிகழ்வு நடைபெற்றது. (ய-26)



யாழ். ஈச்சமோட்டையைச் சேர்ந்த, புலம்பெயர்ந்து தற்போது லண்டனில் வசிப்பவருமான நன்கொடையாளர் வேலுப்பிள்ளைசிவபாலசுப்பிரமணியம் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு 'பூமணி அம்மா' அறக்கட்டளை ஊடாக பொருளாதாரத்தில் நலிவுற்ற 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் 13 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ய-66)



'திராவிட மாதிரியும் தமிழ்நாடும்' என்ற தலைப்பில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் காட்சிகள். (ய)



மயிலணி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் மூன்றாம்நாள் கப்பல் திருவிழா கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை இடம் பெற்றது. (ய-27)



கொடிகாமம் - கச்சாய் வினோபா முன்பள்ளியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா முன்பள்ளி போஷகர் கசிதம்பரநாதன் தலைமையில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

(உயிர்ப்பும் உயிரும் நானே)

தாய் மடியில் 28 . 07 . 1936



இறைவன் மடியில் 04 . 05 . 2023

## T.M. அன்ரனிப்பிள்ளை

(LLB,Attorney-at-Law & Notary Public)

யாழ்ப்பாணம் பாசையூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.T.M.அன்ரனிப்பிள்ளை (LLB,Attorney-at-Law & Notary Public) அவர்கள் கடந்த (04.05.2023) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தீயோ முடியப்பு ராசேந்திரம், அஞ்சலீனா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான யுவக்கீன், மரியை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் திரேசம்மா அவர்களின் பாசமிகு கணவரும், நேவின் பிளெசிடஸ் (கிங்ஸ்ரன்) (BSc UK) , மேரி லூமினா (ஜெயராணி) வைத்தியர் (Australia), கிறிஸ்ரீன் பிலோமினா (விஜயராணி) (UK), ஷெரின் றூபினா (ஜீவராணி) (ஆசிரியை-யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), காலஞ்சென்றவர்களான மேவின், சேர்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்வின், பியானா, யூலியானா, பிரான்சிஸ், ஜோசப், வெனான்சியஸ், காலஞ்சென்ற டேவிட் இராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருட்பணி. பி.பி. பிலிப் OMI, பி.பி. பிறின்ஸ், காலஞ்சென்றவர்களான பி.பி. மத்தியூஸ், பி.பி. அன்ரனி, பி.பி. செபஸ்ரியன் மற்றும் வில்சன் இருதயானந்தன் (பொறியியலாளர் UK), சந்திரா, காலஞ்சென்றவர்களான அன்ரனி, ஜோசப் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஒடிலா, ரைற்ரஸ் பொறியியலாளர் (Australia) , வலன்ரைன் (UK), ஜோன் கொலின் (அதிபர்-யா/பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மேவின், கெவின், சேர்வின், திரேசி, ஸ்ரீபன், ஜெனிற்ரா, ஜேசன், வின்ஸ்ரன், லெனிற்ரா, ஜெனிங்ஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை பிற்பகல் முதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு (11.05.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.
077 104 3577

இல. 847, கடற்கரை வீதி,
பாசையூர், யாழ்ப்பாணம்.

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் டல்லாஸ் என்ற நகரத்தில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, சில மாதங்களுக்கு முன் டெக்சாஸ் மாகாணத்தில் தொடக்கப் பள்ளி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 19 மாணவர்கள் உட்பட 21 பேர் பலியான சம்பவம் அந்த நாட்டை உலுக்கியமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**விற்பனைக்கு**

**சணல் மறி ஆடு**
விற்பனைக்குண்டு.
(வயது : 1 ½)
077 122 9019

(cs 30334) A(N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 05 • 1955



மறைவு 07 • 05 • 2023

## சபாரத்தினம் தங்கரத்தினம்

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தங்கரத்தினம் நேற்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் செல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சின்னபிள்ளையின் மருமகளும், நிரூபன் (மாலுமி), நித்தியா (ஆசிரியர்), நிதர்சன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோபனா (ஆசிரியர்), எமில்ராசா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), தர்சியா (கிராமியவங்கி) ஆகியோரின் மாமியாரும், கனகம்மா, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் கமலநாயகி (கௌரி), தயாபரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், கனகம்மா, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 614 7886

(cs24806 (N-1)

# மரண அறிவித்தல்



## கந்தசாமி மகேந்திரன்

தோற்றம் 27.12.1941 — மறைவு 07.05.2023

நவாலி வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்' கொண்ட கந்தசாமி மகேந்திரன் நேற்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி நாகம்மா தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற ஏகாம்பரம், நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், வசந்தாதேவியின் பாசமிகு கணவரும், நிர்மலேஸ்வரன் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), காலஞ்சென்ற காந்தறூபி மற்றும் மோகனறூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணமலர், ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும், டிலக்சேஸ்வரன் (பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்), விதுஷனா (SLIIT பல்கலைக்கழகம்), நிதர்ஷனா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), யதுர்ஷிகா (மானிப்பாய் மகளிர் பாடசாலை), விதுஷாயினி (மானிப்பாய் மகளிர் பாடசாலை), டிவிசனா (நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் புஷ்பராணி, தனலக்சுமி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 391 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏ.ஐ. செயற்கை நுண்ணறிவு

# சரியாகக் கையாளாவிடின் மனித குலத்துக்கு ஆபத்து

வொஷிங்டன், மே 8

பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏ.ஐ) மிகப்பெரும் மாற்றத்தைக் கொண்டுவரும் நிலையில் அதை முறையாகக் கையாளாவிட்டால் மனிதகுலத்துக்கு அச்சுறுத்தலாக மாறும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த ஏ.ஐ. நிறுவனம் 'சாட்ஜிபிடி' எனும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப மென் பொருளை அறிமுகம் செய்தது.

கேள்விகளுக்கு உடனே பதிலளித்தல், ஏதேனும் ஒரு தலைப்பை உள்ளீடு செய்தால் அதுதொடர்பான தகவல் களைத் தொகுத்துத் தருதல் என மொழிசார்ந்த செயற்பாடுகளை மிக அதிவேகமாக அது செய்து வருகிறது.

பல்வேறு துறைகளில் ஏ.ஐ. மிகப் பெரும் மாற்றத்தைக் கொண்டுவரும் அதேசமயம், இதை முறையாகக் கையாளாவிட்டால் மனிதகுலத்துக்கு அச்சுறுத்தலாக மாறும்.

தற்போது ஏ.ஐ. தொழில்நுட்பம் சார்ந்து நிறுவனங்களிடையே பெரும் போட்டிச் சூழல் உருவாகி இருக்கிறது. அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஏ.ஐ. மூலம் நிறைய போலிச் செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் உருவாக்கப்பட்டு இணையத்தளத்தில் பரப்பப்படுகின்றன.

உண்மை எது? ஏ.ஐ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட செய்தி எது? என்பதைக் கண்டறிய முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். ஏ.ஐ .தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி கவலையளிக்கக் கூடியதாகவுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-இ)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(கொமாண்டர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் 78/1 திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்** நேற்றுமுன்தினம் (06.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார், மதிவதனி, சூரியகுமார், கலைவாணி (மருத்துவர்), கோகிலவதனா, சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சண்முகலிங்கம், நாகேஸ்வரி, மகாதேவன், சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.05.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 - 03 - 1949



இறப்பு 06 - 05 - 2023

### திருமதி செல்வராணி திருச்செல்வம்

நீர்வேலி தெற்கு பூதர்மட ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி திருச்செல்வம் அவர்கள் கடந்த (06-05-2023) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, திரு. செல்லத்துரை இளையபிள்ளை அவர்களின் அன்பு மகளும், திரு. கனகரத்தினம் தங்கம்மாவின் அன்பு மருமகளும், கனகரத்தினம் திருச்செல்வம் அவர்களின் மனைவியும் மதீஸ்சன் (ஜேர்மனி) காயிஸ்திரி, கேதீஸ்வரி, விஜெய் (இலண்டன்), மதிவண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மற்றும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், வேலாயுதம்பிள்ளை மற்றும் சின்னம்மா, வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனித்தா, சுதாகரன், சிவதர்ஜன், துவாரகா, ரேணுகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவஞானம், பரமேஸ்வரி, பத்மாசினி, சுப்புலட்சுமி ரமணி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் பீரதீஸ்ஷா, அமிலியா, மிலேஸ், சாத்வீகா, திபிசிகா, அகல்யாவின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிய்ய இன்று (08.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 24805)(K-1)

தகவல் :குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 - 04 - 1958



இறப்பு 07 - 05 - 2023

### சீவரத்தினம் பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)

மாவிட்டபுரம் தெற்கினைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட சீவரத்தினம் பாலச்சந்திரன் நேற்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், யோகராணியின் (சறோ) அன்புக் கணவரும், மிறோஜன் (ICBT- Jaffna Campus ), கஜந்தன் (வைத்தியர்-தேசிய வைத்தியசாலை கொழும்பு), மிறோஜினி, சுதர்சன் (வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாருகேசி (ஆசிரியை) அவர்களின் மாமனாரும், இரத்தினகுமார், ஆனந்தராஜா (பிரான்ஸ்), விஜயகுமாரி (பவானி), சிவசெல்வச்சந்திரன் (சோமு- கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கேணியடி கொக்குவில் மேற்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 5057

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 05 - 1963



மறைவு 19 - 04 - 2022

### சொக்கலிங்கம் ஜீவகாந்தன்

நாரந்தனை (08.05.2023)

நிலையற்ற இவ்வுலகில் இரண்டொரு நாள்
அதிகமாக வாழ்வதில் பயனொன்றுமில்லை
வாழ்க்கையென்னும் கத்தி துருப்பிடித்து மறைவதை விட
தேய்ந்து மறைவது மேலானதே!
மற்றவர்களுக்கு சிறிதளவாயினும்
நன்மைசெய்து போவதே நல்லது

இறைவா நன்றி

ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

82/2, செட்டித்தெரு,
நல்லூர்.

(cs. 24681) (2.6)

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

## கருவிலுள்ள சிசுவுக்கு மூளைசத்திரசிகிச்சை

அமெரிக்காவில் தாயின் கருவில் இருந்த சிசுவுக்கு மூளையில் சத்திரசிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவரின் கருவிலுள்ள குழந் தைக்கு மூளையிலிருந்து இருதயத்துக்கு குருதியை எடுத்துச் செல்லும் நாளங்கள் வளர்ச்சி அடையாமல் இருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்தனர். அந்தக் குழந்தைக்கு தாயின் வயிற்றிலே சத்திரசிகிச்சை செய்ய மருத்துவர்கள் முடிவுசெய்து, வெற்றிகரமாக சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

சிகிச்சை முடிந்து இரண்டு நாள்களின் பிறகு அந்தக் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை தற்போது நலமாக உள்ளது என மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வறுமை 25 வீதமாக அதிகரிக்கும்

## உலக வங்கி கணிப்பு

கொழும்பு, மே 8

**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை வீதம் 13.1 என்ற நிலையிலிருந்து 25 வீதமாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்று உலக வங்கி கணித்துள்ளது.**

இது தொடர்பில் உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையில்;

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக அடுத்த சில வருடங்களில் வறுமை வீதம் அதிகரித்துச் செல்லும். 25 வீதம் வரையில் இந்த வறுமை வீதம் அதிகரித்துச் செல்ல வாய்ப்புள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது வறுமைக் குறைப்பு மற்றும் மனித மூலதன மேம்பாடு ஆகியவற்றில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரம் இந்த ஆண்டும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும்.

நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகள், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது.

அதுவே வலுவான மற்றும் நெகிழ்வான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வாய்ப்பாக அமையும் - என்றுள்ளது. (ச-இ)

## பயணிகள் முனையத்தில் துப்பாக்கியுடன் அதிகாரி

### கொழும்பு- சென்னை விமான சேவை தாமதம்

கொழும்பு, மே 8

கைத்துப்பாக்கியுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் முனையத்துக்கு வந்த பாதுகாப்பு அதிகாரியால் கொழும்பு - சென்னை விமான சேவை சில மணிநேரம் தாமதமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஒவ்வொரு விமானத்திலும், பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்புக்காகவும் ஒரு பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அதிகாரி தனது கைத்துப்பாக்கியை விமானத்திலிருந்து வெளியே கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது. விமானத்தைவிட்டு வெளியே செல்ல விரும்பினால் துப்பாக்கியை விமானத்தின் தலைமை விமானியிடம் ஒப்படைக்கவேண்டும்.

இந்நிலையில் குறித்த பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கியுடன் பயணிகள் முனையத்துக்கு வந்துள்ளார். அவரிடமிருந்து ஏனைய பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கியைக் கைப்பற்றினார்கள். இதனால், கொழும்பு - சென்னை விமான சேவை சிலமணிநேரம் தாமதமடைந்தது என விமான நிலைய வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி இறப்பு

மட்டக்களப்பு, மே 8

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி கடற்கரைப் பகுதியில், கடலில் குளிக்கச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை வீட்டிலிருந்து வகுப்புக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற மாணவர்களே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 16 வயதுடையவர்கள். இந்தமுறை சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்கள் என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## ஆதிவாசிகள் பிரச்சினைகளை கேட்டறிந்த இரா.சாணக்கியன்!

மன்னார், மே 8

ஆதிவாசிகள் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஆதிவாசிகள் சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடி கேட்டறிந்துள்ளார்.

எல்லைக் கிராமங்களில் தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளைகளை அமைப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் குடும்பிமலை, இரணைக்குளம், மருதங்கேணிக்குளம், பனிச்சங்குளம் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றிருந்தனர்.

அங்கு மருதங்கேணிக்குளம் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது மருதங்கேணிக்குளம் பிரதேசத்தில் வசித்துவருகின்ற ஆதிவாசிகள் சமூகத்தினரின் பிரச்சினைகள், காணிப்பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து ஆதிவாசிகள் சமூகத்தினர் எடுத்துக்கூறினர். (ச-213)

## பொருளாதார நலச்சட்டம் வெள்ளியன்று சமர்ப்பிப்பு

### இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, மே 8

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார நிலையை பலப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய சமூக நலச்சட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சமூக நலச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். அத்தோடு அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்களில் உள்வாங்கப்படுவதற்கு பொருத்தமானவர்களும் இதன் ஊடாகத் தெரிவு செய்யப்படுவர்.

அதேபோன்று எவரேனுமொருவர் இதனைப் பெற தகுதியுடையவராக இருந்தும், அவருக்கு அவை கிடைக்கப்பெறாவிட்டால் மேன்முறையீடு செய்து தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் இதில் காணப்படுகிறது.

1945ஆம் ஆண்டு முதல் நாட்டில் சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறிருந்தும் தற்போது நாட்டிலுள்ள மொத்தக் குடும்பங்களில் 50 சதவீதமானோர் இவற்றை எதிர்பார்த்துள்ளனர்.

எனவே தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்களைக் குறிப்பிட்டவொரு காலப்பகுதியில் மாத்திரம் நடைமுறைப்படுத்தி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதே இதன் இலக்காகும். மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும், அதற்கு அடுத்த கட்டத்திலுள்ள குடும்பங்களுக்கு 8 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும்.

இந்த நலன்புரி தொகையைப் பெறும் குடும்பங்களை 3 ஆண்டுகளுக்குள் அரசாங்கத்திடமிருந்து உதவிகளை எதிர்பார்க்காத குடும்பங்களாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் - என்றார். (ம)

## மலையகத்தில் வெள்ளப்பேரிடர்

நுவரெலியா, மே 8

மலையகத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வெள்ள இடரால், நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதாலும், வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாலும் மிகையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நுவரெலியா - கந்தபளை பகுதிகளில் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறித் தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அத்தோடு, தோட்டங்களை அண்டிய வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் மலையகத்தில் பல பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வற்றாப்பளை கலையியல் திரைப்பட பன்னாட்டு கூடத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட குறும்பட, ஆவணப்பட தயாரிப்புப் போட்டியில் வெற்றிபெற்றவர் களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வடமாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (ச-26)





வரலாற்று பெருமைவாய்ந்த வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா அண்மையில் இடம்பெற்றன. தீர்த்தத் திருவிழா ஆலய பித்தர் கேணியில் இடம்பெற்றது. (ச)



சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் கடந்த வெள்ளிக்கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)



பொருளாதாரம் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு லண்டன் கற்பகவிநாயகர் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் உலருணவுப் பொதிகள் கிளிநொச்சி தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், லண்டன் கற்பகவிநாயகர் ஆலய அறங்காவலர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-113)

ஓட்டோச் சாரதிகளை மயக்கி

# திருடியவர்களில் ஒருவர் கைது

## வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிகள் போல பாசாங்கு செய்து முச்சக்கரவண்டிச் சாரதிகளிடம் நூதனமாக பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்ற கும்பலைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இருவர் தலைமறைவாகிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறையிலிருந்து முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலைக்கு வந்த ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும், சாரதிக்கு குளிர்பானத்துக்குள் மயக்க மருந்து கொடுத்து அவரிடமிருந்த பணம் மற்றும் நகை என்பனவற்றை அபகரித்துச் சென்றனர். அதேநாளில் கீரிமலையிலிருந்து பருத்தித்துறைக்கு வாடகைக்கு அமர்த்திய மற்றொரு முச்சக்கரவண்டிச் சாரதியிடமும் இதேபாணியில் திருடினர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தனர்.


இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அச்சுவேலிப் பகுதியில் இவ்வாறு முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திய இரு ஆண்கள் மற்றும் பெண் ஒருவர் ஆகியோர் சுன்னாகத்துக்குச் சென்றுள்ளனர். அங்கும் இதேபாணியில் மயக்க மருந்து கொடுத்து நகைகளைத் திருட முயன்றபோது கண்டியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவர் மக்களிடம் அகப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

முச்சக்கரவண்டிச் சாரதி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ஒரு தொகைப் பணம் மற்றும் நகை என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திருடுவதற்காகவே வெளி மாகாணங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் விடுதிகளில் அவர்கள் தங்கியிருந்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஓ,26)

# மரண அறிவித்தல்

மலர்வு 03 . 01 . 1949



உதிர்வு 05 . 05 . 2023

## திரு. வல்லிபுரம் ஸ்ரீதரன்

(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

கீரிமலையை பிறப்பிடமாகவும், கிளானை, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் ஸ்ரீதரன் அவர்கள் கடந்த (05.05.2023) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், விமலாம்பிகையின் அன்புக் கணவரும், பூர்வஜா (குடும்பநல உத்தியோகத்தர்- ஆதார வைத்திய சாலை-சாவகச்சேரி), ,அமரர் நிரஜா (BA யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ரம்ஜா (Phd-USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலீபன் (SAKTHIMICRO SYSTEM-சாவகச்சேரி), ஜனந்தன் (Doctor-USA) ஆகியோரின் மாமனாரும், உதித், உத்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும், சந்திரசேகரமூர்த்தி (முன்னாள் இலங்கை வங்கி ஊழியர்), காலஞ்சென்ற கமலானந்தயோகேஸ்வரி (ஆசிரியர்), விஜயபாஸ்கரன், விமலானந்தயோகேஸ்வரி , ரவீந்திரன் (Painter), மனோகரன், கருணாகரன் (Painter) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதுவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளானை, கொல்லங்கலட்டி
தெல்லிப்பளை.

077 5590 741

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மே 8



புத்தூர் கலைமதிப் பகுதியில் 780 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் இளைஞனைக் கைது செய்துள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

புத்தூர் கலைமதி பகுதியில் உயிர்கொல்லி போதை மாத்திரை விற்பனை இடம்பெறுவதாக அச்சுவேலி பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 27 வயதான இளைஞனைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 26 பெட்டிகளில் உள்ளடங்கியிருந்த 780 உயிர்கொல்லி போதை மாத்திரைகளையும் கைப்பற்றினர். அந்தப் பிரதேசத்தில் விற்பனை செய்யும் முகவருக்கு இவர் உதவி புரிந்து வருபவர் என அறியமுடிகிறது. (ஒ,125,23)

## மதப்பிரச்சினைகள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் இன, மத ரீதியில் தொடரும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். இந்து ஆலயங்கள், விகாரைகள் ஆகியவற்றை வைத்து, அரசியல் நடத்த எவருக்கும் உரித்து கிடையாது. மத ரீதியிலான பிரச்சினைகளை அரசு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதைவிடுத்து பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கக்கூடாது. பிரச்சினைகளுக்கு அரசால் தீர்வுகாண முடியாவிடின் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக நீதியைப் பெறவேண்டும். இதில் அரசின் தலையீடு இருக்கக்கூடாது.

அண்மைக்காலங்களாக வடக்கு - கிழக்கில் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் திடீரென அதிகரித்துள்ளன. இதன் பின்னணி குறித்து நாம் ஆராய்ந்தபோது, மர்மமாகவே இருக்கிறது. உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது - என்றார். (அ-ஒ,22)

## மண் துறந்த...

கந்தரோடையில் தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடைச் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கந்தரோடையில் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பௌத்தச் சின்னங்கள் அமைந்துள்ள பகுதிக்கு முன்பாக ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டம் விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காணி அமைந்துள்ள பகுதிக்கு அருகில் வரை சென்றது. போராட்டக்காரர்கள் அங்கும் சுமார் 45 நிமிடங்கள் வரை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கந்தரோடையில் பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்து, தமிழர் வரலாற்றைத் திரிவுபடுத்தாதே, சிங்களத் தொல்பொருள் திணைக்களமே தமிழர் மரபுரிமையை அழிக்காதே, மண் துறந்த புத்தனுக்கு எங்கள் மண் மீது ஆசையா?, இனவாதத்தைக் கைவிடு... புத்த தர்மத்தைக் கடைப்பிடி, கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்பை நிறுத்து! உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களைத் தமது கைகளில் தாங்கியும், பல கோஷங்களை எழுப்பியும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை - கந்தரோடையில் தமிழ்ப் பௌத்தத் துறவிகளின் சமாதிகள் காணப்படும் இடத்துக்கு அருகாமையில் உள்ள தனியார் காணியொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால கொள்வனவு செய்து விகாரை கட்டுவதற்கு வழங்கியுள்ளார். தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பௌத்தத் துறவிகளின் சமாதிகள் அமைந்துள்ள இடத்திலும் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டு இராணுவம் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,66)

## வடக்கில்...

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். அவர்கள் தங்கள் குல தெய்வங்களை வழிபட அந்தந்த இடங்களில் சிறிய மற்றும் பெரிய ஆலயங்களை அமைத்திருக்கின்றார்கள். அதேபோல் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சிங்கள - பௌத்தர்கள் வாழ்வதற்கு முழு உரித்தும் உண்டு. வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்தர்கள் வாழமுடியாது என்று எந்தவொரு சட்டமும் இல்லை. வடக்கில் சிங்கள - பௌத்தர்கள் வாழ்கின்றார்கள். இராணுவத்தினர் இருக்கின்றார்கள். அவர்கள் வழிபட விகாரைகள் அமைப்பதில் தவறில்லை' - என்றார். (அ-ஒ,5,22)

## இருபாலையில்...

இரவு வீட்டார் நித்திரைக்குச் சென்றுள்ளனர். நேற்றுக்காலை எழுந்து பார்த்தபோது வீட்டின் முன்கதவு திறந்தவாறு இருந்துள்ளது. இதனையடுத்து வீட்டின் அறையினுள் சென்று பார்த்தபோது அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த ஆறு பவுண் நகை திருட்டுப் போயிருந்தமை தெரியவந்துள்ளது. (அ-ஒ,125)

## சொந்தப்...

கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பௌத்தர்களே இல்லாத இடங்களில் விகாரைகள் கட்டப்படுகின்றன. அதனைக் கட்டிப் பராமரிக்க மெதுமெதுவாக ஆள்களைக் கொண்டு வந்து, சிங்கள பிரதேசங்களாக்கும் நடவடிக்கை நடந்து வருகிறது. இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்கவேண்டும். பேச்சு, சாத்வீக வழி, நாடாளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்கவேண்டும். அவற்றைச் செய்து கொண்டிருந்தாலும், வேகம் போதாது என நினைக்கிறேன்.

கந்தரோடைக் கிராமத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இந்தப் பிரச்சினை சரியாகப் புரியவில்லை. எப்படி சிங்கள-பௌத்த மதமாற்ற முயற்சிகள் நடக்கின்றன என்பது விளங்கவில்லை. அது மாத்திரமல்ல, சற்று அதிக பணம் கிடைக்கிறது என்றால் காணிகளை விற்கிறார்கள். முக்கியமாக வெளிநாட்டில் உள்ளவர்கள்தான் இப்படிச்செய்கிறார்கள். வெளிநாட்டில் உள்ள ஒருவர்தான் கந்தரோடையில் விகாரை கட்டப்படவுள்ள காணியையும் விற்றார். இங்குள்ள காணிகளை பிற இனத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். வேறு சில இடங்களிலும் இவ்வாறு காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.

இராணுவத்தினர் வெற்றுக் காணிகளை அடையாளம் கண்டு, உரிமையாளர்களைத் தேடிப்பிடித்து அவற்றை வாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். சிறியளவு பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதற்காக பெரும்பான்மையினத்தவருக்கு காணிகளை விற்பதை நிறுத்துங்கள்.

விகாரைகள் கட்டுவதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்படவேண்டும். இப்போது நடக்கும் போராட்டங்கள் மிகச் சிறியவை. 3, 5, 10 பேருடன் நடக்கும் போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும் - என்றார். (அ-ஒ,26)

## எரிவாயுத்...

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் லிட்ரோ எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதற்கான காரணம் என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எரிவாயு விலை குறைக்கப்படலாம் என்பதால் முகவர்கள் அதிகளவில் கொள்வனவு செய்யவில்லை. விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னரே கொள்வனவு செய்கின்றனர். எம்மால் நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 எரிவாயு சிலிண்டர்களே கொண்டுவரமுடியும். இந்த வாரம் அந்தத் தட்டுப்பாடு முழுமையாக நீங்கும் என்று எதிர்பார்க்கின்றேன்' என ராஜ்குமார் தெரிவித்தார். (அ,ஒ,5)

## சீனி விலை...

சீனியின் விலையை அதிகரிப்பதற்காக வர்த்தகர்கள் கையிருப்புகளை மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அது தொடர்பில் துரித சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது. சீனி கையிருப்புகளை மறைத்து வைத்தால், அவை நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ,இ)

## பணத்துக்காக...

நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

வெளி மாகாணங்களைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுச் சிறுவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நன்னடத்தைப் பாடசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர். அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினமே வவுனியா பேருந்துநிலையத்தில் வைத்து வவுனியாப் பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் அச்சுவேலிக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டனர்.

அச்சுவேலிப் பொலிஸாரால் சிறுவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், நன்னடத்தைப் பாடசாலையின் காவலாளிக்கு தமது பெற்றோர் பணத்தை வைப்பிலிட்டதாகவும் அவரே தப்பிக்க உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் காவலாளி வெளியிலிருந்து சட்டவிரோதமாக பொருள்களைக் கொண்டு வந்து தருவார் என்றும் சிறுவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய காவலாளியை பாடசாலை நிர்வாகம் பணி இடைநிறுத்தியுள்ளது. ஆனால், பொலிஸார் இதுவரை அவரைக் கைதுசெய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ,ஒ,26)

## மழைநேரத்தில்...

உயிரிழந்துள்ளான். வண்ணார்பண்ணையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கண்ணதாசன் ராகுலன் (வயது - 18) என்ற மாணவனே அதிகாலை 1.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரின் வீட்டில் நின்ற ஆடு குட்டிப் போட்டுள்ளது. கடும் மழையால் ஆட்டுக் கொட்டிலில் வெள்ளம் நின்றமையால் ஆட்டுக் குட்டிகளை இடமாற்றுவதற்காக, அதற்கு அருகிலிருந்த பலா மரத்தில் 'ஹோல்டரை' தொட்டபோது மின்சாரம் தாக்கியுள்ளது. உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ,26)

## ஆண்டிறுதியில்...

'அரசாங்கம் எதிர்பார்த்த இலக்குகளை எட்டினால், பொதுமக்களும் பயன்பெறுவார்கள். நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திய பின்னர் அரச ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பை வழங்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்' என பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார். (அ,ஒ,இ)

## ரணிலுடனான...

நடைபெறும் சந்திப்பிலோ ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் பங்கேற்கப்போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு முன்னதாக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதியின் சந்திப்புத் தொடர்பில் கடந்த காலங்களில் புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கு நேரடியாக அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் இம்முறையும் அவ்வாறு அழைப்பு விடுத்தால் மாத்திரமே சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன. (அ-ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

# திருத்தங்கள் வேண்டாம்; முற்றாக நீக்கவேண்டும்

### தமிழ் கட்சிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 8

பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக எந்தவொரு முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்கப்போவதில்லை. அந்தச் சட்டவரைவு கைவிடப்படவேண்டும். அதேவேளை பயங்கரவாத தடைச்சட்டமும் முழுமையாக நீக்கப்பட வேண்டும்-இவ்வாறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எழுந்த எதிர்ப்பையடுத்து அதனை முன்வைத்துள்ள பிற்போட்டுள்ள அரசாங்கம், சட்டவரைவு தொடர்பில் திருத்தங்களை முன்வைக்குமாறு கோரியுள்ள நிலையிலேயே தமிழ்க் கட்சித் தலைவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றுவோம் என்று இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் வாக்குறுதிகளை அளித்திருந்தாலும் அதனை தற்போது வரையில் நிறைவேற்றவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் புதிதாக உருவாக்கப்படும் சட்டவரைவு ஏற்கனவே உள்ளதை விட மோசமானது. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு புதிதாக பிறிதொரு சட்டத்தை உருவாக்கத்தேவையில்லை-என்றார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தெரிவிக்கையில்;

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும். அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தைக் கொண்டுவருவதையோ அந்தச் சட்டத்தின் மூலமாக ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படுவதையோ நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவைக் கைவிடும் அதேநேரம் அரசாங்கம் உடனடியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்கவேண்டும்- என்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்; நிறைவேற்று அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக கைவிடும் அதே நேரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்கவேண்டும். இதேவேளை- ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டத்தின்போது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு மாற்றாக புதிய வரைவொன்றை தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக்குழுவின் அங்கத்துவத்தில் நானும் உள்ளடக்கப்பட்டிருந்தேன். எனினும், எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி குறித்த குழுவிலிருந்து நான் வெளியேறியுள்ளேன்- என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலர் சி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்; ஜனநாயகத்துக்கும், மனிதர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (அ- ஒ.இ)

# இன, மத முரண்பாடுகளால் நல்லிணக்கத்துக்கு பாதிப்பு

ராஜித கவலை

யாழ்ப்பாணம், மே 8

தற்போது அதிகரித்துவரும் இன மற்றும் மத முரண்பாடுகளால் நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது -இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு பக்கத்தில் சிங்களவர்களையும் தமிழர்களையும் தூண்டிவிட்டு இன ரீதியான பிரச்சினையை தலைதூக்கிவிட முயற்சி நடக்கின்றது. மறுபக்கத்தில் பௌத்தர்களையும் இந்துக்களையும் முட்டிமோதவிட்டு மத ரீதியிலான பிரச்சினையை மென்மேலும் தீவிரப்படுத்த சதி நடக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்துக்கு பெரிதும் பாதிப்பே ஏற்படுத்தி வருகின்றது.

மேற்படி இரு பிரச்சினைகளும் ஒரே மேசையில் பேசித் தீர்த்தால் தான் அந்தப் பிரச்சினைகளுக்கு முடிவுகட்டலாம். இல்லையேல் இந்தப் பிரச்சினைகள் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்- என்றார். (அ-ஒ-22)


## தவறிவிட்டது

மீள் ஒப்படைப்பு செய்பவர்களுக்கு தகுந்த சன்மானம் உண்டு

திருமதி அன்னலட்சுமி சிதம்பரப்பிள்ளை அவர்களின் தே.அ.அ. இல.196971901542 கடந்த (14.04.2023) அன்று முல்லைத்தீவுக்கும் யாழ்ப்பாணப் பேரூந்து நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது.

திருமதி அன்னலட்சுமி சிதம்பரப்பிள்ளை
கண்டி வீதி, (யா/சா/இ/கல்லூரி அருகாமை)
சங்கத்தானை, சாவகச்சேரி.

தொடர்பு: 077 033 9477


## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18 - 12 - 1962 | 07 - 05 - 2023 |



### இராமலிங்கம் சிவசுதன்

மண்டை தீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல. 44/2, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவசுதன் நேற்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பூங்காவனம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பாக்கியம் தம்பதியரின் மருமகனும், தயாழினியின் அன்புக் கணவரும், மதுசா (யாழ். பல்கலைக்கழகம்), தேனுஜா, கஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருஞானசம்பந்தன் (சாவகச்சேரி), அகிலத்திருநாயகி (நல்லூர்), ஜெகநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்- யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), கமலநாயகி (அமெரிக்கா), தெய்வசிகாமணி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், செந்தூரன், மயூரன், தீபா (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், சசீலன், சஜீதா, சஜீவன், சஜீனா, சதுன்ஜா, சாகித்தியா, தேவதர்ஷிகா, டர்சனா, டக்சன் (அமெரிக்கா), அஸ்விதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2023) திங்கட்கிழமை அவரது கொக்குவிலுள்ள இல்லத்தில் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/2, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

077 434 9121

தகவல்:
குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.